கற்றலுக்குப் பாதை அமைப்போம்

# முன்னேறுவோம்

## வகுப்பு - 7

## சமூக அறிவியல்

மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT),
கேரளம்.
2022

## முன்னுரை

2019 முதல் 2021 வரையிலான கோவிட் பெருந்தொற்றின் காரணமாக உருவான சூழ்நிலையால் மாணவர்களுக்கு நேரடிக் கல்வி முழுமையாகக் கிடைக்கவில்லை. மாணவர்களின் கற்றலில் சில இடைவெளிகள் இருப்பதாக 2022 இல் நடைபெற்ற முதல் பருவத்தேர்வுத் தாள்களை மதிப்பீடு செய்தபோதும், ஆசிரியர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டபோதும் தெரியவந்தது. முன் வகுப்புகளில் கிடைக்கவேண்டியிருந்த சில கருத்துகள் மாணவர்களுக்கு மீண்டும் கிடைப்பதற்கும் தொடர்கல்வியை உறுதிப்படுத்துவதற்கும் உதவுகின்ற செயல்பாடுகளை உட்படுத்தி சிறுநூல் ஒன்றை உருவாக்கி வழங்க உள்ளோம். மாணவர்களுக்கு ஏற்பட்ட கற்றல் இடைவெளிக்குத் தீர்வுகாணும் வகையில் தேவையான விளக்கங்களும் செயல்பாடுகளும் இந்நூலில் உட்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்கள் சுய கற்றல் அல்லது ஆசிரியர்களின் உதவியுடன் இச்செயல்பாட்டு நூலைப் பயன்படுத்தித் தொடர்கல்வியில் தன்னம்பிக்கையோடு முன்னேறட்டும். வாழ்த்துகள்.

**இயக்குநர்**

மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

## செயல்பாடு 1

**கற்றல் அடைவு**

- அட்ச - தீர்க்கக் கோடுகள் புவியின் மையத்திலிருந்து உள்ள கோண தூரங்கள் என்று புரிந்துகொள்கின்றனர்.
- அட்ச தீர்க்கக் கோடுகளைப் பயன்படுத்தி பூமியின் இடங்களை அடையாளப்படுத்துகின்றனர்.

**கருத்துகள்**

வகுப்பு 6 அலகு 5 பூமி கதையும் காரியமும்.
வகுப்பு 7 அலகு 1 ஐரோப்பா மாற்றத்தின் பாதையில்
வகுப்பு 7 அலகு 5 வாணிபத்திலிருந்து அதிகாரத்தை நோக்கி
வகுப்பு 7 அலகு 6 நிலப்படங்களின் பொருள்தேடி

***செயல்பாட்டுத் தொகுப்பு***

**தேவையான் பொருட்கள்**

- உலக வரைபடம் (அவுட்லைன்) - (குழுவிற்கு ஒன்று) (பிற்சேர்க்கை - 7.1)
- நிலப்படத்தொகுப்பு - குழுவிற்கு ஒன்று
- A4 தாள்
- கலர் பென்சில்
- இருபுற பசைகொண்ட நாடா.
- கண்டங்களின் சிறப்புகள் (பிற்சேர்க்கை 7.2)
- கண்டங்களின் சிறப்புகள் (பிற்சேர்க்கை7.3)

**செயல்வரிசை**

மாணவர்களை ஆறு குழுக்களாகப் பிரித்து உலக வரைபடம் (அவுட்லைன்) கொடுக்க வேண்டும். பெருங்கடல்களை நீல நிறத்திலும் பெருங்கண்டங்களைப் பலதரப்பட்ட நிறங்களிலும் அடையாளப்படுத்துகின்றனர். ஆறு குழுக்களுக்கும் ஒவ்வொரு உலகவரைபடம் (அரசியல் வரைபடம்) பெரியது கொடுக்கப்படவேண்டும். இரண்டு மீட்டர் தூரத்திலிருந்து ஒரு நாணயத்தை அந்த வரைபடத்தின் மீது போடுகின்றனர். நாணயம் விழுந்த பெருங்கண்டங்களை ஆசிரியர் வரிசைப் படுத்துகின்றனர். பெருங்கண்டங்களின் சிறப்புக்கள் எழுதிய குறிப்புச்சீட்டுகள் கொடுக்கப்படுகிறது. அதிலிருந்து ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு குறிப்புச்சீட்டைத் தேரந்தெடுக்கின்றனர். சிறப்புக்களை முன்வைத்து பெருங்கண்டங்களைக் கண்டுபிடிக்கின்றனர். ஒவ்வொரு பெருங்கண்டங்களினுடையவும் தனிச்சிறப்புக்களை உட்படுத்தி குறிப்புகள் தயார் செய்கின்றனர்.

| |
|---|
| மிகப்பெரிய கண்டம்<br>நம் இந்திய நாடு இந்தக் கண்டத்தின் ஒரு பகுதியாகும். |

| |
|---|
| இந்த கண்டத்தின் பெரும் பகுதிகள் பாலைவனமாகும். நைல் நதி இந்த கண்டத்தின் வழியாகக் செல்கிறது. |

| |
|---|
| உலகில் கோதுமை அதிகமான இங்குதான் உற்பத்தி செய்யப்படுகிறது. ஐம்பெரும் ஏரிகள் இந்த கண்டத்தில் உள்ளன. |

| |
|---|
| அமேசான் நதி இந்தக் கண்டத்தில் உள்ளது. |

இந்தக் கண்டம் மரவள்ளிக்கிழங்கின் பிறப்பிடம் ஆகும்.

உலகத்தின் அதிகமான குளிர்ப்பிரதேசம் வெள்ளைப் பூகண்டம் என்றறியப்படுகிறது.


யூரால் மலைகள் இந்தக்கண்டத்தை ஆசியாவிலிருந்து பிரிக்கின்றது. தொழில்மயமாக்கம் துரிதமான வளர்ச்சியை அடைந்துள்ளது.

பிலாட்டிப்பஸ், கங்காரு, டிங்கோகர் முதலிய விலங்குகள் இந்தக் கண்டத்தில் மட்டும் காணப்படுகின்றன. கண்டத் தீவு என்று சிறப்பிக்கப்படுகிறது.

## படைப்பு

***கண்டங்களின் சிறப்புக்கள் பற்றிய குறிப்பு***

**செயல்பாடு 6.1.2 பயிற்சிதாள் (பிற்சேர்க்கை 7.4)**




பயிற்சித்தாளை நிரப்புவதற்கான நிலப்படம் உற்றுநோக்குதல். அட்ச - தீர்க்கக் கோடுகளைப் பற்றி விவாதித்து நிலப்படம்/உலக உருண்டையை உற்று நோக்கிப் பயிற்சித்தாளை நிறைவு செய்தல்.

| பயிற்சித்தாள் | |
|---|---|
| **A** | **B** |
| பூமியை இரண்டு அரை கோளங்களாகப் பிரிக்கும் அட்சக்கோடு | |
| நிலநடுக்கோடு கடந்து செல்கின்ற பெருங்கண்டங்கள் | |
| நிலநடுக்கோட்டின் எந்த பகுதியில் அதிகமான நாடுகள் காணப்படுகின்றன (மேல்/கீழ்) | |
| வடதுருவ கோளத்தில் மட்டும் காணப்படுகின்ற பெருங்கண்டங்கள் | |
| தென்துருவ கோளத்தில் மட்டும் காணப்படுகின்ற பெருங்கண்டங்கள். | |
| இரண்டு அரைகோளங்களிலும் காணப்படுகின்ற பெருங்கண்டங்கள். | |
| முக்கியமான அட்சக்கோடுகளை நிலநடுக்கோடு, கடகரேகை ($23^{1}/_{2}{}^{o}$ வடக்கு அட்சக்கோடு) மகரரேகை ($23^{1}/_{2}{}^{o}$ தெற்கு அட்சக்கோடு) போன்றவை கடந்து செல்கின்ற பெருங்கண்டங்கள் | |
| இந்தியா வழியாக கடந்து செல்கின்ற முக்கியமான அட்சக்கோடு) | |
| இந்தியாவிற்கு வியாபாரத்திற்காக வந்த போர்த்துக் கீசியர்கள் (போர்த்துகள்) டச்சுகாரர்கள் (நெதர்லாந்து) ஆங்கிலேயர்கள் (யு.கெ) பிரஞ்சுகாரர்கள் (பிரான்ஸ்) போன்றவர்கள் எந்தக் கண்டத்தில் உட்படுகின்றனர். | |

## செயல்பாடு 1.3

**வகுப்பு 7 அலகு 1 ஐரோப்பா மாற்றத்தின் பாதைகள்**

*மறுமலர்ச்சிக் காலகட்டத்திற்குப்பின் அறிவியல் துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் புதிய இயந்திரங்களின் கண்டு பிடிப்பிற்குக் காரணமாயின. இயந்திரங்களின் உற்பத்தித்துறையில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்ததன் பலனாக உற்பத்தி பல மடங்கு பெருகியது. செலவு குறைந்தது. உற்பத்தித் துறையில் ஏற்பட்ட இந்த மாற்றங்கள் தொழிற்புரட்சி என அறியப்படுகிறது. தொழிற்புரட்சியின் காரணமாக ஐரோப்பிய நாடுகளில் உற்பத்தி பொருட்கள் பெருகின. இந்த உற்பத்திப் பொருட்களை விற்பதற்கான சந்தைகளைத் தேடி பல்வேறு நாடுகளுக்கு கடல்வழியாக துணிகரப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஐரோப்பியர்களின் இந்தியாவிற்கான வருகையும் இந்தப் பயணத்தின் ஆரம்பமாக இருந்தது.*

**கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை வாசித்து நாடுகளைக் கண்டறியவும்.**

- தொழிற்புரட்சிக்கு அடித்தளமிட்ட நாடு

- மறுமலர்ச்சிக்குத் தொடக்கமிட்ட நாடு

- முதன்முறையாக கடல்வழியாக இந்தியாவை வந்தடைந்த நாடு

- மிக அதிக காலம் இந்தியாவில் ஆட்சி புரிந்தநாடு

## செயல்பாடு 2.1

**கற்றலடைவு**

■ இடைக்கால இந்தியாவின் சமூகப் பொருளாதார வாழ்க்கையைப் பகுப்பாய்வு செய்தல்

**கருத்துகள்**

வகுப்பு 6 அலகு 2 இடைக்கால இந்தியா, சமூகம், வளம், பரிமாற்றம்

வகுப்பு 7 அலகு 4 இந்தியா புதுயுகத்தை நோக்கி

வகுப்பு 7 அலகு 8 நவீன கேரள உருவாக்கம்

**செயல்பாட்டுத்தொகுப்பு**

***தேவையான கருவிகள்***

வாசிப்புக் குறிப்பு (பிற்சேர்க்கை 7.5)

**செயல்பாட்டு வரிசை**

**இடைக்கால இந்தியாவில் பெண் சமூகம்**

குழந்தைத் திருமணமும் சதி முதலிய வழக்கங்களும் நாட்டின் பலபகுதிகளில் நிலை நின்றிருந்தன. 17-ம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வருகை புரிந்த பிரெஞ்சு பயணியான. 'ஃபிராங்கோயில் பர்ணியர்' இந்த சதி வழக்கத்தை நேரில் பார்த்ததாகக் கூறியுள்ளனர். மறுமணத்திற்குக் கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. பெண்குழந்தைகள் சிறு வயதிலேயே திருமணம் செய்துகொள்வதால் அவர்களுக்குக் கல்வி கற்க வாய்ப்பு கிடைக்கவில்லை.

இடைக்கால இந்தியாவில் காணப்பட்ட சமத்துவமின்மையும் மூட நம்பிக்கைகளும் வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்புகளிலிருந்து தெளிவாகக் காணக் கிடைக்கின்றன.


> பெண், குழந்தைக் திருமணம், விதவைகளின் மறுமணம் மறுப்பு, பெண் கல்வி மறுப்பு போன்றவை பெண்களின் முன்னேற்றத்திற்குக் தடையாக இருந்தன. 19 ம் நூற்றாண்டில் உருவான சீர்திருத்த இயக்கங்களும், ஆங்கிலக் கல்விபரவலும் பெண்களின் முன்னேற்றத்திற்கு வழி வகுத்தது.

இடைக்காலத்திலுள்ள பெண்களின் இந்த நிலையிலிருந்து பெண்களின் முன்னேற்றத்திற்கு உதவிய காரணிகளை அட்டவணைப்படுத்தவும்.

- சீர்திருத்த இயக்கங்களின் செயல்பாடுகள்
-
-

## செயல்பாடு 2.2

நவீன சமூகம் பல துறைகளிலும் முன்னேற்றத்தைப் பெற்ற பின்பும் ஒரு நாகரீக சமூகத்திற்குப் பொருந்தாத சில செய்திகள் நமது நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து கொண்டிருக்கின்றன.




மனிதனின் பகுத்தறிவும் அறிவியல் சிந்தனையையும் இல்லாமலாக்குகின்ற இதுபோன்ற நம்பிக்கைகளும் சமூகசார் சமத்துவமின்மையும் அழிக்க வேண்டியவைகளல்லவா? இதுபோன்ற செயல்பாடுகளை அழிப்பதற்காகச் சட்டம் இயற்றுதல் குறித்து உங்களது கருத்து என்ன? உங்களது கருத்துக்களைப் பதிவு செய்யவும்.

## செயல்பாடு 3.1

### கற்றலடைவு

- அட்சக்கோடுகள், தீர்க்கக் கோடுகள் பயன்படுத்தி பூமியில் இடநிர்ணயம் நடத்துதல்.
- பெருங்கண்டங்கள், பெருங்கடல்கள் குறித்து அறிவுகளைப் பெறுதல்.

### கருத்துகள்

வகுப்பு 4 அலகு 8 வாசிக்கலாம் வரையலாம்

வகுப்பு 5 அலகு 6 பெருங்கண்டங்களும் பெருங்கடல்களும்

வகுப்பு 7 அலகு 1 ஐரோப்பா மாற்றத்தின்பாதையில்

வகுப்பு 7 அலகு 2 வாணிபத்திலிருந்து அதிகாரத்தை நோக்கி

வகுப்பு 7 அலகு 6 நிலப்படங்களின் பொருள் தேடி

## செயல்பாட்டுத் தொகுப்பு

### *தேவையான் கருவிகள்*

- கிறிஸ்டோபர் கொலம்பஸ், வாஸ்கோடகாமா, மெகல்லன் போன்றோரின் கடல் வழிப் பயணப்பாதை வரைப்படம் (பிற்சேர்க்கை 7.6)
- அட்லஸ் (குழுவிற்கு ஒன்று)
- உலக உருண்டை (குழுவிற்கு ஒன்று)
- பெருங்கடல்களைக் குறித்த தனிச்சிறப்புக்கள் அடங்கிய குறிப்புச் சீட்டுகள் (பிற்சேர்க்கை 7.7)

**பெருங்கடல்கள் சிறப்புக்கள்**

உலகில் மிக ஆழமான சலஞ்சர் பள்ளம் இந்தப் பெருங்கடலில்தான் உள்ளது.

உலகிலேயை போக்குவரத்து நெரிசல் அதிகமான கடல்வழிப்பாதை இந்த பெருங்கடலின் வடபகுதியில் தான் உள்ளது.

ஒரு நாட்டின் பெயரில் அறியப்படுகின்ற பெருங்கடல்

பெருங்கடலின் மேற்பரப்பு ஏறத்தாள முழுமையாக குளிர்ந்து உறைந்த நிலையில் உள்ளது.

வடதுருவத்தைச் சுற்றியுள்ள பெருங்கடல்

## செயல்பாட்டு வரிசை


பெருங்கடல்களைக் குறித்த சிறப்புக்கள் கொண்ட துண்டுச்சீட்டுகளை எடுத்து அதனடிப்படையில் ஐந்து குழுக்களாகின்றனர். (பசிபிக், அட்லாண்டிக், இந்தியன், ஆர்டிக், அண்டார்டிக் பெருங்கடல்)


"வயலும் நதியும் கடந்து செல்வோம்
கடலில் கடலில் நகர்ந்து செல்வோம்
அன்று கொலம்பஸ் போனதுபோல்
புதிய உலகைத் தேடிச்செல்வோம் நாம்.
புது வானைத் தேடிச் செல்வோம்


***N.V கிருஷ்ணவாரியர்***

துருக்கியர்கள் காண்ஸ்டாண்டினோபிலை கைப்பற்றியது ஆசிய, ஐரோப்பிய நாடுகள்கிடையே நிலவிலிருந்த வியாபாரத் தொடர்புகளுக்குத் தடையை ஏற்படுத்தியது. இது ஐரோப்பாவை புது வியாபார வழிகளைத் தேடிச் செல்வதற்குத் தூண்டியது. புதிய பெருங்கடல் வழிப்பயணங்கள் தேடி ஐரோப்பிய மாலுமிகள் துணிகரப்பயணம் மேற்கொள்ளத் துவங்கினர்.

கிறிஸ்டபர் கொலம்பஸ், வாஸ்கோடகாமா, மெகல்லன் போன்றோரது கடல்வழிப் பயணங்கள் உலக வரலாற்றை மாற்றியமைத்தன.




குழுவில் கொடுக்கப்பட்டுள்ள பயணப்பாதை வரைபடமும் அட்லசும் உற்றுநோக்கி இவர்கள் மேற்கொண்ட துணிகரப்பயணங்கள் எந்தெந்த பெருங்கடல்கள் வழி என்பதைக் கண்டறிந்து அட்டவணையை நிரப்பவும்.

| மாலுமி | பயணம் மேற்கொண்ட பெருங்கடல்கள் |
|---|---|
| கிறிஸ்டோபர் கொலம்பஸ் | |
| வாஸ்கோடகாமா | |
| மெகல்லன் | |

## செயல்பாடு 3.2

**பெருங்கடல்களுக்கு அருகாமையில் உள்ள கண்டங்களைக் கண்டு பிடியுங்கள் (பிற்சேர்க்கை 7.7)**

| பெருங்கடல் | கண்டங்கள் |
|---|---|
| பசிபிக் பெருங்கடல் | |
| அட்லான்டிக் பெருங்கடல் | |
| இந்தியப் பெருங்கடல் | |
| ஆர்டிக் பெருங்கடல் | |
| அன்டார்டிக் பெருங்கடல் | |

## செயல்பாடு 3.3

மாணவர்களை ஏழு குழுக்களாக்குதல். உலக உருண்டை. அட்லஸ் ஆகியவற்றின் உதவியுடன் தரப்பட்டுள்ள அட்டவணையை பூர்த்தி செய்யச் செய்தல் (பிற்சேர்க்கை 7.7)

| பெருங்கண்டங்கள் | அருகாமையில் உள்ள பெருங்கடல்கள் | எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் பெருங்கண்டங்கள் |
|---|---|---|
| ஆசியா | | |
| ஆப்ரிக்கா | | |
| வட அமெரிக்கா | | |
| தென் அமெரிக்கா | | |
| அன்டார்டிக்கா | | |
| ஐரோப்பா | | |
| ஆஸ்திரேலியா | | |

பிற்சேர்க்கை 7.1



பிற்சேர்க்கை 7.2.1

## பெருங்கண்டங்களின் தனித்தன்மைகள்




**ஆசியா**

அளவிலும் மக்கள் தொகையிலும் முதலிடத்ததில் நிற்கும் பெருங்கண்டம் ஆசியா ஆகும். இது இந்தியப் பெருங்கடலின் வடக்குப்பகுதியில் உள்ளது. அதிகமான மழை கிடைக்கும் பகுதிகள். மழை மிகவும் குறைவாகக் கிடைக்கும் பகுதிகள். ஆண்டு முழுவதும் பனி மூடியுள்ள பகுதிகள். வெப்பம் கூடிய பகுதிகள். மிதமான வெப்பமும் குளிரும் உள்ள பகுதிகள். இவ்வாறு ஏராளமான வேறுபாடுகளை இக்கண்டத்தில் காணலாம். உலகத்திலேயே மிகவும் உயரமான சிகரமாகிய எவரெஸ்ட் இங்குதான் உள்ளது. நமது நாடான இந்தியா இந்த கண்டத்தின் ஒரு பகுதி ஆகும். கோதுமை, சோளம் முதலான பல்வேறு பயிர்கள் பயிரிடப்படுகின்றன. உலகிலேயே அதிகமாக ஆசியாவில் தான் நெல் பயிரிடப்படுகிறது.




**ஆப்ரிக்கா**

அளவிலும் மக்கள் தொகையிலும் இரண்டாவது இடத்தில் உள்ள கண்டம் ஆப்ரிக்கா ஆகும். இந்தியப் பெருங்கடலுக்கும் அட்லான்டிக் கடலுக்கும் இடையில் இது உள்ளது. அதிகமான பகுதிகளும் பாலைவனம் ஆகும். எனவே விவசாயம் மிகக் குறைவாகவே உள்ளது. நிலநடுக்கோட்டிற்கு இடப்பக்கமாகப் பரவிக்கிடக்கும் ஆப்ரிக்காவில் வித்தியாசமான காலநிலை மண்டலங்கள் உள்ளன. உலகத்தில் மிகப்பெரிய பாலைவனமான சகாராவும் இங்குதான் உள்ளது. உலகத்தில் மிகவும் நீளம் கூடிய நதியான நைல் நதியும் இந்த கண்டத்தில்தான் பாய்கிறது. உலகத்தில் மிக அதிகமான வன விலங்குகள் நிறைந்த அடர்ந்த காடுகளும் இங்குதான் உள்ளன.

**பிற்சேர்க்கை 7.2.2**




**வட அமெரிக்கா**

பூமியில் வடமேற்குப் பகுதியிலுள்ள ஒரு கண்டம்தான் வட அமெரிக்கா. பசிபிக் பெருங்கடலுக்கும் அட்லான்டிக் பெருங்கடலுக்கும் இடையில் இந்த கண்டம் அமைந்துள்ளது. அளவில் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ள இந்த கண்டத்தில் பனி மூடியுள்ள பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் இனியூட்டுகள் (எஸ்கிமோக்கள்) என அழைக்கப்படுகின்றனர். அலாஸ்கா மலைத் தொடரில் உள்ள மாக்கின்லிதான் இங்குள்ள மிக உயரமான சிகரம் ஆகும். புவியின் மேற்பரப்பில் கிடைக்கக் கூடிய சுத்த நீரில் ஏறத்தாழ 21 சதவீதத்தைத் தன்னகத்தே கொண்டிருக்கும் ஐம்பெரும் ஏரிகள் இங்குதான் உள்ளன. விவசாயத்திற்குத் தகுந்த மண்ணும் காலநிலையும் இங்கு உள்ளது. உலகில் அதிகமாக கோதுமை உற்பத்தி செய்வதும் இங்குதான்.




**தென் அமெரிக்கா**

தென் அமெரிக்கா பூமியின் தென் மேற்கு பகுதியில் உள்ள ஒரு கண்டம் ஆகும். பசிபிக் பெருங்கடலுக்கும் அட்லான்டிக் பெருங்கடலுக்கும் இடையே இது அமைந்துள்ளது. அளவில் நான்காம் இடத்தைப் பிடித்துள்ள இந்த கண்டம் வழியாகத்தான் உலகில் அதிகமான சுத்த நீரைக் கொண்டு செல்லும் அமேசான் நதி பாய்கிறது. இந்த கண்டத்தில் உள்ள மிகவும் உயரமான சிகரம் மௌண்ட் 'கோங்குவா' ஆகும். அமேசான் நதிக்கரையில் உள்ள அடர்ந்த காடுகளில் பல்வேறு தாவரங்களும் உயிரினங்களும் அதிகமாக காணப்படுகின்றன. கால்நடை வளர்த்தல் இங்குள்ள மக்களின் முக்கிய தொழில் ஆகும்.

**பிற்சேர்க்கை 7.2.3**




**அன்டார்டிக்கா**

இது பூமியின் தென் பகுதியில் உள்ள ஒரு கண்டம் ஆகும். பூமியின் தென் துருவம் இப்பகுதியில் காணப்படுகிறது அளவில் ஐந்தாம் இடத்தைப் பிடித்துள்ள இந்த கண்டத்தில்தான் உலகின் அதிகமான குளிர் அனுபவப்படுகின்ற இடம் காணப்படுகிறது. வருடம் முழுவதும் பனி மூடிக்கிடப்பதால் இது வெள்ளைப் பூகண்டம் என்று அறியப்படுகிறது. அதிகப்படியான கனிம வளங்கள் உள்ள இந்த கண்டத்தில் கனிம ஆராய்ச்சிக்காகவும் காலநிலை ஆராய்ச்சிக்காகவும் பல்வேறு நாடுகள் இங்கு ஆய்வு மையங்களை அமைத்துள்ளன. மைத்ரி, பாரதி ஆகியவை அன்டார்டிக்காவில் உள்ள இந்தியா ஆராயாச்சி மையங்கள் ஆகும். மக்கள் இங்கு நிரந்தரமாக வசிக்காத காரணத்தினால் பென்குயின்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.




**ஐரோப்பா**

அளவில் ஆறாம் இடத்தைப் பிடித்துள்ள இந்த கண்டமானது அட்லான்டிக் பெருங்கடலுக்கும் ஆசியக் கண்டத்துக்கும் இடையில் காணப்படுகிறது. யுரான் மலைத்தொடர் ஐரோப்பாவை ஆசியாவிலிருந்து பிரிக்கிறது. மக்கள் தொகையில் மூன்றாம் இடத்திலுள்ள இந்த கண்டத்தின் தென் பகுதியில் மிதமான வெப்பமும் குளிரும் நிலவுகிறது ஆனால் வட பகுதியில் அதிகமான குளிர் நிலவுகிறது. தொழில் ரீதியாக அதிக முன்னேற்றம் பெற்றிருந்தாலும் மீன் பிடித்தல் ஒரு முக்கிய தொழில் ஆகும்.

**பிற்சேர்க்கை 7.2.4**




**ஆஸ்திரேலியா**


ஓஷானியா என்ற பெயரில் அறியப்படுகின்ற இக்கண்டம் அளவில் மிகவும் சிறியது. முழுமையாக நீரால் சூழப்பட்டிருப்பதால் இந்த பூகண்டமானது கண்டத்தீவு என்று வழங்கப்படுகிறது. முட்டையிடும் விலங்கினங்களான பிளாட்டிபஸ், டிங்கோ, கங்காரு ஆகியவை இந்த கண்டத்தில் மட்டுமே காணப்படுகின்றன. கோதுமை இங்கு அதிகமாக பயிரிடப்படுகிறது.

**பிற்சேர்க்கை 7.3**


**கண்டங்களின் தனிச்சிறப்புகள் குறிப்புச்சீட்டு**

| |
|---|
| மிகப்பெரிய கண்டம்<br>நம் இந்திய நாடு இந்தக் கண்டத்தின் ஒரு பகுதியாகும். |
| இந்த கண்டத்தின் கூடுதலான பகுதிகள் பாலைவனமாகும். நைல் நதி இந்த கண்டத்தின் வழியாகச் செல்கிறது. |
| உலகில் அதிகமான கோதுமை இங்குதான் உற்பத்தி செய்யப்படுகிறது. ஐம்பெரும் ஏரிகள் இந்த கண்டத்தில் உள்ளன. |
| அமேசான் நதி இந்தக் கண்டத்தில் தான் உள்ளது.<br>இந்தக் கண்டம் மரவள்ளிக்கிழங்கின் பிறப்பிடம் ஆகும். |
| உலகத்தின் அதிகமான குளிர்ப்பிரதேசம் வெள்ளைப் பூகண்டம் என்றறியப்படுகிறது. |
| யூரால் மலைகள் இந்தக்கண்டத்தை ஆசியாவிலிருந்து பிரிக்கின்றது. தொழில்மயமாக்கம் துரிதமான வளர்ச்சியை அடைந்துள்ளது. |
| பிலாட்டிப்பஸ், கங்காரு, டிங்கோகர் முதலிய விலங்குகள் இந்தக் கண்டத்தில் மட்டும் காணப்படுகின்றன. கண்டத் தீவு என்று சிறப்பிக்கப்படுகிறது. |


**பிற்சேர்க்கை 7.4**


WORLD MAP
Canada
United States of America
Greenland (Denmark)
Russia
China
India
Australia
Brazil
Alaska (USA)
Mexico
Mongolia
Kazakhstan
Prime Meridian
Equator
Tropic of Cancer
Tropic of Capricorn
Arctic Circle
Antarctic Circle
ARCTIC OCEAN
NORTH PACIFIC OCEAN
SOUTH PACIFIC OCEAN
NORTH ATLANTIC OCEAN
SOUTH ATLANTIC OCEAN
INDIAN OCEAN
SOUTHERN OCEAN


பிற்சேர்க்கை 7.5.1


Christopher Columbus'
Voyages
NORTH
AMERICA
Mississippi
River
Hudson
Bay
Saint Lawrence
River
Gulf of
Mexico
PACIFIC
OCEAN
SOUTH
AMERICA
ATLANTIC
OCEAN
EUROPE
AFRICA
N
E
S
W
1492–1493
1493–1496
1502–1504
1498–1500
0 500 1,000 miles
0 500 1,000 kilometers

பிற்சேர்க்கை 7.5.2


Vasco da Gama's First Voyage to India, 1497–99
PORTUGAL
Lisbon
Azores
Canary Is.
Cape Verde Is.
St. Helena
ATLANTIC OCEAN
Elmina
AFRICA
Mediterranean Sea
Alexandria
Cairo
ARABIA
Caspian Sea
Aden
Hormuz
Arabian Sea
Diu
Goa
INDIA
Cannanore
Calicut
Cochin
Mogadishu
Malindi
Kilwa
Mozambique
Sofala
Madagascar
Cape of Good Hope
INDIAN OCEAN
0 500 1000 mi
0 800 1600 km
Vasco da Gama's route
A COMPTON'S MAP

**பிற்சேர்க்கை 7.5.3**


Magellan's route
1521 – Magellan is killed; Sebastian del Cano takes over remaining route
Spain
Start 1519
end 1522
NORTH AMERICA
SOUTH AMERICA
Pacific Ocean
Atlantic Ocean
AFRICA
EUROPE
ASIA
Indian Ocean
AUSTRALIA

பிற்சேர்க்கை 7.6

**பெருங்கடல்கள் - தனிச்சிறப்புகள்**

| |
|---|
| உலகில் மிக ஆழமான சலஞ்சர் பள்ளம் இந்தப் பகுதியில் தான் உள்ளது. |


| |
|---|
| உலகில் போக்குவரத்து நெரிசல் அதிகமான கடல் வழிப்பாதை இந்தப் பெருங்கடலின் வட பகுதியில்தான் உள்ளது. |

| |
|---|
| ஒரு நாட்டின் பெயரில் அறியப்படுகின்ற பெருங்கடல் |

| |
|---|
| பெருங்கடலின் மேற்பரப்பு ஏறத்தாழ முழுமையாக குளிர்ந்து உறைந்த நிலையில் உள்ளது. |

| |
|---|
| வடதுருவத்தைச் சுற்றியுள்ள பெருங்கடல் |

**பிற்சேர்க்கை 7.7**


NORTH PACIFIC OCEAN
SOUTH PACIFIC OCEAN
NORTH ATLANTIC OCEAN
SOUTH ATLANTIC OCEAN
INDIAN OCEAN
SOUTHERN OCEAN
ARCTIC OCEAN
CANADA
UNITED STATES
MEXICO
BRAZIL
ARGENTINA
RUSSIA
CHINA
INDIA
AUSTRALIA
ANTARCTICA
MADAGASCAR
© Nations Online Project